# பத்திரிக்கைச் செய்தி

## கள ஆய்வு செய்வதற்காக லஞ்சம் வாங்கிய கள உதவியாளர்கள் 2 பேர்களுக்கு தலா 2 வருட கடுங்காவல் தண்டனையும், ரூ.10,000 அபராதமும் விதித்து தீர்ப்பு

கடந்த 2011ம் ஆண்டு புகார்தாரர் திரு.அப்துல் ஹக்கீம், கோயமுத்தூர் மாவட்டத்தில் வசித்து வந்தார். இவர் தன்னுடைய இடத்தை கள ஆய்வு செய்துதர கோயமுத்தூர் மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணபபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க அப்போது பணியிலிருந்த திரு.வைத்தியநாதன், நகர சர்வேயர், கோயமுத்தூர் மாநகராட்சி அவர்கள் தனக்கு ரூ.2,000/-ம் தன்னுடன் பணிபுரியும் திரு.செல்வராஜ், கள உதவியாளர் மற்றும் திரு,ரங்கசாமி, கள உதவியாளர் ஆகிய இருவருக்கும் லஞ்சமாக தலா ரூ.500-ம் கொடுக்க வேண்டுமென கட்டாயபடுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, கோயம்புத்தூர் பிரிவில் புகார் மனு அளித்து அதன் பேரில் கடந்த 16.08.2011 அன்று பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கைது செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டது. இன்று 12.12.2023 இவ்வழக்கின் எதிரிகள் திரு.செல்வராஜ், கள உதவியாளர் மற்றும் திரு,ரங்கசாமி, கள உதவியாளர் ஆகியோர்களுக்கு சட்டப்பிரிவு 7of PC Act-ன் 1988 கீழ் 1 வருட கடுங்காவல் தண்டனையுடன் ரூ.5,000/- அபராதமும் மற்றும் சட்டப்பிரிவு 13(2) & 13(1) (d) of PC Act-ன் கீழ் 1 வருட கடுங்காவல் தண்டனையுடன் ரூ.5,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது. மேலும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி திரு.வைத்தியநாதன், நகர சர்வேயர், கோயமுத்தூர் மாநகராட்சி அவர்கள் வழக்கு நடைபெற்று வந்த நிலையில் காலமாகிவிட்டார்.